# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அரையாண்டுத் தேர்வு

## 2016 - 2017

## தமிழ்மொழி

## வளர் தமிழ் 8

சுட்டெண்:...............................................................

நேரம்: 180 மணித்துளிகள்

www.tamiledc.com

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. யாதும் ஊரே யாவரும் ____________________ என்பது பழந்தமிழர் கொள்கை.

அ) கேளிர் ஆ) கேளீர் இ) கேழிர் ஈ) கேழீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. காண்பர் என்ற வினைச் சொல்லின் விகுதி

அ) ஆர் ஆ) அர் இ) காண் ஈ) ப்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. எழில் என்பது

அ) உலகம் ஆ) இன்பம் இ) அழகு ஈ) இல்லம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. குண்டலகேசி என்ற நூலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ஆ) நாதகுத்தனார்

இ) திருத்தக்கதேவர் ஈ) சீர்த்தலைச்சாத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 18 ஆ) 247 இ) 216 ஈ) 30

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. படித்தாள் என்ற வினைச் சொல்லின் பகுதி

அ) படி ஆ)ஆள் இ) அள் ஈ) த்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. சுருக்கவிழ்ந்த முன்குடுமிச் சோழியா! என்ற பாட்டைப் பாடியவர்

அ) ஔவையார் ஆ) காளமேகம்

இ) சோமசுந்தரப்புலவர் ஈ) திருவள்ளுவர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. சென்றான் என்ற வினைச் சொல்லின் வினையடி

அ) சென் ஆ) சென்று இ) ஆன் ஈ) செல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. பார் என்ற சொல்லின் பொருள்

அ) வானம் ஆ) கடல் இ) உலகம் ஈ) காடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. நீங்கள் பெற்றோர் சொல்வதைக் கேளுங்கள்! இச்சொல்லியம்

அ) வினா ஆ) கூற்று இ) ஏவல் ஈ) மெய்ப்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. ஒன்றன் பாலிற்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) குயிலி ஆ) குதிரை இ) மாணவர் ஈ) குரங்குகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. காளமேகப் புலவர் மோர் வாங்கிப் பருகியது

அ) பாடினியிடம் ஆ) விறலியிடம்

இ) ஆய்ச்சியரிடம் ஈ) கூத்தியிடம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. குன்றனும் எழிலியும் நாளை விடுமுறைக்குச் சுற்றுலாச் ________

அ) சென்றனர் ஆ) செல்வர் இ) சென்றார் ஈ) செல்கின்றனர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. உண்டான் என்பதைப் பலர்பாலாக மாற்றினால்

அ) உண்டாள் ஆ) உண்டனன் இ) உண்டனர் ஈ) உண்பர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. இயலும் இசையும் கலந்த நடிப்பாலும் பேச்சாலும் கருத்துகளைப் புலப்படுத்துவது

அ) இசைத்தமிழ் ஆ) நாடகத்தமிழ்

இ) பேச்சுத்தமிழ் ஈ) இயற்றமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. நிகழ்ச்சி ஒன்றை மேடையேற்றுவதற்கு முன்னர் நடத்திப் பார்ப்பது

அ) ஒத்திகை ஆ) அரங்கேற்றம்

இ) வெள்ளோட்டம் ஈ) முற்றுகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. பண்டாரவன்னியனின் படைத்தலைவர்

அ) செகராசசேகரன் ஆ) வருணகுலம்

இ) குலசேகரமுதலியார் ஈ) செண்பகப்பெருமாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. நீ மலர் நிறைந்து நின்றாய் நிமிர்ந்தென்னைக் கவர்ந்தாய்! எனக் கூறியவர்

அ) பாரதியார் ஆ) இளங்கோவடிகள்

இ) உருத்திரமூர்த்தி ஈ) பாவேந்தர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. சிறுவர்கள் ஆடிப் பாடிப் பள்ளிக்குச் சென்றனர்.

இதில் ஆடிப்பாடி என்பது

அ) இரட்டைக்கிளவி ஆ) இணைமொழி

இ) அடுக்குத்தொடர் ஈ) அடுக்கிடுக்குத்தொடர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. ''மன்னவனே! ஏன் அழைத்தாய் எனத்தெரியும்'' என்றவர்

அ) துறவி ஆ) அமைச்சர்

இ) அதியர்மான் ஈ) ஔவையார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. நான் + அது என்பதைச் சேர்த்து எழுதினால்

அ) நானது ஆ) என்னது இ) உனது ஈ) எனது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. எமக்குக் கிடைத்துள்ள கழகநூல்களின் எண்ணிக்கை

அ) 48 ஆ) 24 இ) 18 ஈ) 36

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. சைவநெறி இலக்கியங்களில் ஒன்று

அ) சீறாப்புராணம் ஆ) இயேசுகாவியம்

இ) திருவாசகம் ஈ) இரட்சணியயாத்திரிகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. **அது** என்பது

அ) 5 ஆம் வேற்றுமை உருபு ஆ) 6 ஆம் வேற்றுமை உருபு

இ) 3 ஆம் வேற்றுமை உருபு ஈ) 4 ஆம் வேற்றுமை உருபு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வானம் கவிழ்ந்து பாரெல்லாம் குளிர மழை பெய்த காலம்

அ) பனிகாலம் ஆ) கோடைகாலம்

இ) கார்காலம் ஈ) குளிர்காலம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. பின்வருவனவற்றுள் தத்தம் பொருள் உணர்த்தும் இடைச்சொல்

அ) ஆல் ஆ) அத்து இ) அம் ஈ) உம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. முல்லைத்தீவில் பண்டாரவன்னியனால் கைப்பற்றப்பட்ட பீரங்கிகள்

அ) ஆங்கிலேயருடையது ஆ) ஒல்லாந்தருடையது

இ) போர்த்துக்கேயருடையது ஈ) சிங்களவருடையது

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. மகனை இழந்த தாய் கதறிக்கதறி அழுதாள்.

இதில் வந்துள்ள எழுவாய்

அ) மகன் ஆ) தாய் இ) கதறி ஈ) அழுதாள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. வீரத்தில் உயர்ந்தவன் இராவணன். இதில் வந்துள்ள 5 ஆம் வேற்றுமைப் பொருள்

அ) ஏது ஆ) எல்லை இ) ஒப்பு ஈ) நீங்கல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. அஞ்சி என்ற பெயர் கொண்டபோதும் அஞ்சாது வாழ்ந்த மன்னன்

அ) சேரமன்னன் ஆ) அதியர்மான்

இ) நெடுஞ்செழியன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நாம்செய்யும் செயல்கள் வெற்றியளிக்க வேண்டும் என்று நினைக்கின்றோம். ஆனால் எதை எப்படிச் செய்தால் வெற்றி பெறுவோம் என்பதை எண்ண மறந்துவிடுகின்றோம். ஒரு செயலைத் திட்டமிட்டுச் செய்வதில்தான் அதன் வெற்றி தங்கியுள்ளது. வெற்றியும் தோல்வியும் செய்கிற வேலையும் வேறுபடலாம். பொதுவானவையாக இருப்பது எமது அணுகுமுறையும் நாம் செய்யும் அணியமுந்தான். ஒரு செயலை வெற்றிகரமாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வலுப்பெற வலுப்பெற வெற்றிப்பேறு (சாதனை) என்பதே எளிதாகிவிடுகின்றது. எத்தகைய பின்புலமும் இல்லாமலே செயலைத் தொடங்கியவர்கள் பல வெற்றிகளை ஈட்டியிருக்கின்றார்கள். இதற்குக் கரணியம் என்ன தெரியுமா? அவர்கள் மனதில் வளர்த்துக்கொண்ட அசையாத தன்னம்பிக்கைதான். தன்னம்பிக்கையுடன் தொடங்கிய செயல்கள் உறுதியாக வெற்றி பெறும். தன்னம்பிக்கையும் விடாமுயற்சியும் ஒருவரை வெற்றிப் பேறுகளின் உச்சிக்கே கொண்டு செல்லும். நாமும் தன்னம்பிக்கையுடன் நல்லனவற்றைச் செய்ய முயல்வோம். வெற்றி பெறுவோம்.

1. நாம் எதை எண்ண மறந்துவிடுகின்றோம்?

   ________________________________________

2. எத்தகைய எண்ணம் வலுப்பெற வலுப்பெற வெற்றிப் பேறு எளிதாகிவிடும்?

   ________________________________________

   ________________________________________

3. எச் செயல்கள் உறுதியாக வெற்றியளிக்கும்?

   ________________________________________

   ________________________________________

4. எதில் வெற்றி தங்கியுள்ளது எனக் கூறப்படுகிறது?

   ________________________________________

5. ஒருவரை வெற்றிப்பேறுகளின் உச்சிக்குக் கொண்டு செல்பவை எவை?

   ________________________________________

   ________________________________________

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. வரலாற்றுப் புகழ் பூத்த வன்னியின் இரு மன்னர்களும் யாவர்?

2. ஈழத்து ஆசுகவி என அழைக்கப்பட்டவர் யார்?

3. உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் நூல் எது?

4. முதல் மொழி தமிழே என்று நிறுவிய மொழியியல் அறிஞர் யார்?

5. வலம்படு வாய்வாள் ஏந்தி... என்ற பாடல் யாரைப் புகழ்ந்து பாடப்பட்டது?

6. இறுதிவரை ஆங்கிலேயருக்கு அடிபணியாமல் எதிர்த்துப் போராடி வீரச்சாவடைந்த வன்னி மன்னன் யார்?

7. அடியேனின் உயிர் அதிக நாள் இருந்தென்ன பயன்
இக்கூற்று யாருக்கு? யாரால் கூறப்பட்டது?

புள்ளிகள் 10

4) **தரப்பட்டுள்ள சொல்லைப் பொருத்தமாக வைத்துக் கவிதையை ஆக்குவோம்.**

## விழித்தெழு

| | | | | |
|---|---|---|---|---|
| தனத்தை | நீ | தகர் | அருவிகள் | அழித்திடு |

*பெண்ணே ______________________ விழித்தெழு!*

*பேதமையைக் கிழித் தெழு!*

*அறியாமையைத் ______________________ த் தெழு!*

*அறிவியலை இழுத் தெழு!*

*கயவர்களை ______________________ !*

*கண்ணீர் ______________________ துடைத்தெழு!*

*அடிமைத் ______________________ உடைத்தெழு!*

*அன்பிற்கு என்றும் பணிந்திடு!*

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1) அ ) சொல்லிய உறுப்புகள் எவை?

______________________________

ஆ) சொல்லிய உறுப்புகள் அனைத்தும் இடம்பெறுமாறு சொல்லியம் ஒன்று எழுதுக.

______________________________

2) பின்வரும் வினைச்சொற்களின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.

| **வினைச்சொற்கள்** | **பகுதி** | **இடைநிலை** | **விகுதி** |
|---|---|---|---|
| பாடினான் | | | |
| ஓடுகின்றது | | | |

3) பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

கலப்புச் சொல்லியம் :- ______________________________

______________________________

கூட்டுச் சொல்லியம் :- ______________________________

______________________________

4) பின்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ) வெள்ளோட்டம் :- ______________________________

______________________________

ஆ) அரசன் :- ______________________________

______________________________

5) தொடர்ச் சொல்லியத்தைத் தனிச் சொல்லியங்களாக மாற்றி எழுதுக.

பண்டாரவன்னியன் ஆங்கிலேயரின் பெரும்படையுடன் போரிட்டு போரின்போது விழுப்புண்பட்டு வீரச்சாவடைந்தான்.

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

மாணவர்களாகிய எங்களுக்குச் சில கடமைகள் இருக்கின்றன. நேரத்திற்குப் பள்ளி செல்லுதல், ஆசிரியர் கற்பிக்கும்போது கவனமாகக் கேட்டல், ஆசிரியர் தரும் வீட்டுப் பாடங்களை ஒழுங்காகச் செய்தல் என்பன அவையாகும். அத்தோடு உடன் படிக்கும் மாணவருடன் நட்புடன் பழக வேண்டும். ஒருவருக்கொருவர் உதவி செய்து அன்பாக இருத்தல் வேண்டும்.

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ காளமேகப்புலவர்
- ✸ தாயக உணவுகளும் வாழிட உணவுகளும் இவற்றினால் ஏற்படும் நன்மை தீமைகள்.
- ✸ வீட்டுத்தோட்டமும் அதன் பயன்களும்

புள்ளிகள் 20